Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO. 164/2021

**Deposition of PW-1 Witness for**

| | |
|---|---|
| Name | **திரு. மாயாண்டி** |
| Father's name | மாயா |
| Village | ரங்கநாதபுரம் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2025.

Signature of Witness.

16.04.2025

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

நான் திருவில்லிப்புத்தூரில் உள்ள ரங்கநாதபுரத்தில் வசித்து வருகீறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது அப்பா திருவில்லிப்புத்தூரில் உள்ள செண்பகத்தோப்பு ரோட்டில் உள்ள செக்கூரணியில் உள்ள 3 ஏக்கர் நிலம் வைத்து இருந்தார். எனது அப்பாவிற்கு நாங்கள் 3 மகன்கள். சம்பவம் நடப்பதற்கு 3 வருடத்திற்கு முன்பு எனது அப்பா தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக எனக்கும் எனது 2 சகோதரர்களுக்கும் மேற்படி 3 ஏக்கர் நிலத்தை ஆளுக்கு 1 ஏக்கர் வீதம் எழுதி கொடுத்தார். எனது தம்பி மாயாண்டி குடும்ப சூழ்நிலை காரணமாக தனது 1 ஏக்கர் நிலத்தை அரியசாமிக்கு கிரையம் எழுதி கொடுத்தார்.

அந்த நிலத்தில் அரியசாமி விவசாயம் செய்து வந்தார். 12.09.2020 ம் தேதியன்று அந்த நிலத்தில் வேலி போட ஆரம்பித்தார். அப்போது நானும் எனது அப்பாவும் தனது தம்பி கோவிந்தராஜ் அங்கு சென்று வேலி அமைத்தால் எங்கள் நிலத்திற்கு எப்படி செல்வது என்று கூறி அதனை தடுத்து நிறுத்தினோம்.

அன்று மாலை சுமார் 5 மணி அளவில் மம்சாபுரம் மெயின் ரோட்டில் உள்ள இருளப்பசாமி கோவில் அருகில் எனது தம்பி கோவிந்தராஜ் நின்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் மூவரும் கம்பு மற்றும் கட்டையுடன் அவரை சூழ்ந்து கொண்டு அவரை தாக்க முற்படுவதாக எனது உறவினர் ஒருவர் வந்து என்னிடம் கூறினார். அப்போது வீட்டில் இருந்த நானும் எனது அப்பாவும் எனது மகன் மாயக்கண்ணனும் அந்த இடத்திற்கு சென்றோம். அப்போது எதிரிகளிடம் பிரச்சனை வேண்டாம் என்றும் சுமுகமாக முடித்துக்கொள்வோம் என்றும் பேச்சு வார்த்தை நடத்தினோம். ஆனால் அவர்கள் எங்களை என்னடா சுன்னி, கொத்தா, கொம்மா, தேவிடியா மகனே என்று கூறி எதிரி ஜெயபிரகாஷ் (A3) என்னை உருட்டுக்கட்டையால் அடிக்க வந்தார். அப்போது நான் எனது இடது கையால் அதனை தடுத்தேன். அதனால் எனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டது. அதை தட்டிக்கேட்க வந்த எனது தந்தை மாயாவை அருண்குமார் உருட்டுக்கட்டையால் இடதுபக்க முதுகில் தாக்கினார். அவர் உடனே மயக்கம் அடைந்து விட்டார். அப்போது அரியசாமி என்பவர் என்னை அசிங்கமாக கொத்தா, கொம்மா, என்று பேசி உருட்டுக்கட்டையால் என்னை தாக்கினார்.

என்னையும் எனது தந்தையையும் எனது தம்பி கோவிந்தராஜ்ம் எனது மகன் மாயக்கண்ணனும் சேர்ந்து திருவில்லிப்புத்தூரில் உள்ள அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். மருத்துவமனையில் இருந்து கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வந்து என்னை விசாரித்தனர். நான் புகார் மனு கொடுத்தேன். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எனது தந்தை எனக்கும் எனது இரண்டு தம்பிகளுக்கும் நிலம் எழுதிக்கொடுததாரா என்றால் ஆமாம். எப்போது எழுதிக் கொடுத்தார்கள் என்று எனக்கு தேதி மாதம் ஞாபகம் இல்லை. எங்களுக்கு நிலம் எழுதிக்கொடுத்து ஒருவருடம் கழித்து எனது தம்பியிடம் அரியசாமி கிரையம் பெற்றார். சம்பவம் நடப்பதற்கு

முன்பே அரியசாமி கிரையம் பெற்று விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான்.

எனது நிலத்தை தாண்டிதான் அரியசாமி நிலத்திற்கு செல்லவேண்டும் என்றால் அரியசாமியும் நிலத்தை கடந்து தான் எனது நிலத்திற்கும் எனது தம்பி கோவிந்தராஜ் நிலத்திற்கும் செல்ல வேண்டும். வேலி போட்டவர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்க நிலத்திற்கு சென்றபோது அங்கு எதிரிகள் மூன்று பேரும் அங்கு இருந்தார்கள். நாங்கள் சத்தம் போட்டவுடன் ஊர்க்காரர்கள் அனைவரும் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு அவர்கள் வேலையை நிறுத்திவிட்டார்கள் நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம் என்றால் சரிதான்.

நாங்கள் இந்த சம்பவம் நடந்த உடன் காடை விற்றுவிட்டோம். எனது தம்பி எதிரியான அரியசாமிக்கு அவரது காட்டை விற்றபிறகு நானும் எனது காட்டை அவரை கிரையம் பெற்றுக்கொள்ளுமாறு கூறினேன் என்றால் சரியல்ல. எனக்கு விற்கவேண்டும் என்ற நினைப்பே கிடையாது. நானும் எதிரியான அரியசாமியும் ஒரே நபருக்குதான் எங்களது இடத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டோம் என்றால் சரி. நாங்கள் காலை 7 மணி அளவில் காட்டிற்கு சென்றோம் காலை 8.30 மணி வரை அங்கு இருந்தோம். எதிரிகள் ஊர் திருவண்ணாமலை என்றாலும் எங்கள் ஊர் ரங்கநாதபுரம் என்றாலும் சரிதான். இரண்டு ஊர்களும் இடையே 3 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

சம்பவத்து அன்று சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு அருகில் உள்ள டீக்கடையில் அதிக கூட்டம் இருந்தது என்றால் சரிதான். எதிரிகள் மூவரும் எனது தம்பியை சூழ்ந்த நின்று கொண்டு இருந்ததை என்னிடம் யார் வந்து கூறினார்கள் என்று எனக்கு தெரியாது. புகார் மனுவில் என்னிடம் தகவல் சொன்ன நபரின் பெயரை கூறினேனா என்றால் இல்லை. என்னிடம் தகவல் கொடுத்தவுடன் நான்தான் எனது அப்பாவையும் மகனையும் சம்பவ இடத்திற்கு அழைத்து வந்தேன் என்றால் சரிதான். என்னிடம் தகவல் கொடுத்து பத்து நிமிடத்தில் நாங்கள் மூவரும் அங்கு சென்று விட்டோம். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது எதிரிகள் மூவரும் எனது தம்பி கோவிந்தராஜை சூழ்ந்து கொண்டு நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். எனது தம்பி மேற்கு பக்கம் பார்த்து நின்று கொண்டிருந்தார்.

இருளப்பசாமி கோவிலானது கிழக்கு பார்த்து அமைந்து உள்ளது. அந்தக் கோவிலுக்கு முன்பு மெயின் ரோடு உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் மூவரும் மேற்கு பக்கம் பார்த்து நின்று கொண்டிருந்தனர். அந்த இடத்தில் சுமார் பத்து நபர்கள் இருந்தார்கள். அங்கு நின்று கொண்டிருந்த 10 நபர்களும் யார் என்று எனக்கு தெரியாது. அவர்கள் அனைவரும் எங்களை விலக்கிவிட முற்பட்டார்களா என்றால் இல்லை. நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்று சமாதனமாக பேச முற்பட்ட போது எதிரிகள் மூவரும் எங்களை அடித்து விட்டனர்.

என்னை அடிக்க வந்தபோது என் தம்பியும், மகனும் அதைத் தடுக்கவில்லை. என்னை அடித்தவுடன் நான் கீழே விழுந்து விட்டேன். கை வேதனை இருந்தாலும் எனது தந்தையை எதிரி அரியசாமி அடித்தை பார்த்தேன். எனது தந்தையை எதிரி அரியசாமி அவரது குருக்கில் அடித்தவுடன் அவர் மயங்கிவிட்டார். சம்பவ இடத்திற்கு உடனடியாக போலீசார் வந்துவிட்டனர். போலீசார் வந்து விலக்கிவிட்டவுடன் அனைவரும் ஓடிவிட்டனர் என்றால் சரிதான். மயக்கம் அடைந்த எனது தந்தையை எனது மகன் இருசக்கர வாகனத்தில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றான். நான் நடந்தே மருத்துவமனைக்கு சென்றேன். நான் ரங்கநாதபுரத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் 20 நிமிடம் ஆகும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து ஒரு 15 நிமிடமாக எதிரிகள் எங்களை மறித்தார்கள். அந்த 15 நிமிடத்திற்குள் போலீசார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பே எனது தந்தையை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டனர் என்றால் சரிதான்.

நான் மருத்துவமனைக்கு சென்ற போது அங்கு மருத்துவர்கள் யாரும் இல்லை 10 நிமிடம் கழித்துதான் வந்தார்கள். நான் மாலை சுமார் 5.30 மணிக்கு மருத்துவமனை சென்றேன். நான் மருத்துவமனைக்கு போகும்போது எனது தந்தை மயக்கநிலையில் இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தையை முதலில் மருத்துவமனையில் அனுமதித்தார்கள். நான் மருத்துவமனையில் 2 நாட்கள் இருந்தேன். நான் மருத்துவமனைக்கு சென்று அரை மணி நேரம் கழித்து போலீசார் அங்கு வந்தனர். சம்பவ இடத்திற்கு வந்த காவலரிடம் என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான்.

போலீசார் முன்னிலையில் நான் சொல்வதை எனது மகன் புகார் மனுவாக எழுதி கொடுத்தார். புகார் மனு எழுதிய பேப்பரை எனது மகன் கடைக்கு சென்று வாங்கி வந்தார். புகார் மனுவில் நானும் எனது தந்தையும் கையெழுத்து இட்டோம். நாங்கள் சுமார் இரவு 8 மணியைப் போல் போலீசாரிடம் புகார் கொடுத்தோம். போலீசாரிடம் யார் தகவல் கொடுத்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் மனு கொடுத்ததற்கு பின்பு போலீசார் என்னை இன்றுவரை விசாரிக்கவில்லை. நான் எதிரிகள் மேல் உள்ள கோவத்தில் தான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

அருண்குமார் வெளியூரில் வேலைப்பார்த்து வருகிறார் என்றால் சரிதான். பிரகாஷ் என்பவரும் வெளியூர்காரரா என்றால் சரியல்ல அவர் திருவண்ணாமலையில் வசித்து வருகிறார். திருவண்ணாமலை எனக்கும் வெளியூர் என்றால் சரிதான். நான் சொன்னவாறு சொன்னவிதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் மேற்படி சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண் 2
திருவில்லிப்புத்தூர்.

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SRIVILLIPUTTUR**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE )**
**CC .No.164/2021**
**16-04-2025**
**Deposition of Witness for : P.W. 2**

| Name : | மாயா | Religion : | |
|---|---|---|---|
| Father's /Husband Name : | மாயா | Taluk : | |
| Village : | ரெங்கநாதபுரம் | Calling : | |
| Caste | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) of the day of 16-04-2025

எதிரிகள் ஆஜர்.

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை –</u>**

நான் திருவில்லிபுத்தூரிலுள்ள ரெங்கநாதபுரம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி, வருடம் ஞாபகம் இல்லை. நான் எனது செட்டூரேணியிலுள்ள 3 ஏக்கர் காட்டை எனது 3 மகன்களுக்கும் தலா 1 ஏக்கராக எழுதிக் கொடுத்துவிட்டேன். எனது இளைய மகன் மாயாண்டி தனது 1 ஏக்கர் நிலத்தை விற்றுவிட்டான். ஆஜர் எதிரி அரியசாமிக்கு விற்றுவிட்டார். அரியசாமி அந்த நேரத்தில் வேலி அடைத்ததை பக்கத்து நிலத்துக்காரர் என்னிடமும், எனது மகனிடமும் வந்து கூறினார். சம்பவத்தன்று நானும், எனது மூத்த மகன் மாயாண்டியும் அங்கு சென்று உங்கள் நிலத்தை தாண்டித்தான் எங்கள் நிலத்திற்கு செல்ல வேண்டும், அதனால் வேலி போட்டு அடைக்காதீர்கள் என்று கெஞ்சினோம். அரியசாமியிடம் இவ்வாறு வேலி போட்டு அடைக்காதீர்கள், இல்லையென்றால் எங்களது மீதி நிலத்தையும் கிரையம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு, நானும், எனது மகனும் வீட்டிற்கு வந்து விட்டோம். சம்பவத்தன்று மாலை சுமார் 04.00 மணியளவில் மம்சாபுரம் ரோட்டிலுள்ள இருளப்பசாமி கோவிலுக்கு அருகில் எனது மகன் கோவிந்தராஜிடம் வாக்குவாதம் செய்ததாக எனக்கு தகவல் தெரிவித்தார்கள். உடனே நானும், அ.சா.1ம் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு சென்று

அவர்களிடம் பிரச்சனை வேண்டாம் என்று சுமூகமாக பேசினோம். ஆனால் அவர்கள் எங்கை தேவிடியா மகனே, அவுசாரி மகனே மற்றும் சொல்லமுடியாத கேவலமான வார்த்தைகளால் எங்களை திட்டினார் என்று எதிரிகள் மூவரும் உருட்டுக் கட்டையை எடுத்து அ.சா.1ஐ தலையில் தாக்கல் வந்தபோது அவன் கையில் வைத்து தடுத்ததில் அவரது கை முறிந்துவிட்டது. அதை தட்டிக் கேட்ட என்னை அதே தடிக் கட்டையை வைத்து எனது இடுப்பில் தாக்கினர். உடனே நான் சம்பவ இடத்திலேயே மயக்கமடைந்து விட்டேன். பின்பு எனது இளைய மகன் கோவிந்தராஜன் அ.சா.1ன் மகனான மாயக்கண்ணனும் என்னை மருத்துவமனையில் சேர்த்தார்கள். பின்பு போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்து மருத்துவமனையிலேயே இருங்கள் மருத்துவர் வந்து சிகிச்சை அளிப்பார் என்று கூறிவிட்டு சென்றார்கள். அதில் கொரோனா பெருந்தொற்று காலம் என்பதால் 2 நாட்களாக மருத்துவர்கள் யாரும் வந்து எங்களை பரிசோதனை செய்யவில்லை. 2 நாட்கள் கழித்தும் எந்த மருத்துவரும் வந்து எங்களை பார்க்காததால், என் மகன் வலியில் துடித்ததை காண முடியாமல் நான் மருத்துவரிடம் எங்களை வீட்டிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டேன். பின்பு நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அரியசாமி தனது நிலத்தை வேலி போடுவதாக எனது மகன் கோவிந்தசாமி பார்த்துவிட்டு வந்து என்னிடம் தகவல் கூறினார். அ.சா.1 தொலைபேசி மூலம் எனக்கு தகவல் கூறினார். காலை சுமார் 08.00 மணியளவில் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நான் எனது காட்டிற்கு சென்றபோது அங்கு கல் ஊன்றுபவர்கள் மற்றும் எதிரி அருண்குமார் மட்டும் இருந்தார். மற்ற இரண்டு எதிரிகள் அங்க இல்லை என்றால் சரிதான். எனது மகன் மீதமுள்ள நிலத்தையும் எதிரிகளே கிரையம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டார்களா? என்றால் இல்லை. நான் காட்டிற்கு சென்று அரைமணி நேரம் அங்கு இருந்தேன். அந்த சமயத்தில் அங்க வேற யாரும் வரவில்லை. நான் அங்கு சென்றபோது கல்லை ஊன்றி

வேலியை கட்டிவிட்டனர். பின்பு அவர்களே அதனை பிடிங்கி எறிந்துவிட்டு சென்றுவிட்டனர். அதன் பிறகு இரண்டாம் நாள் காலை சுமார் 07.00 மணிக்கு நான் காட்டிற்கு சென்று பார்த்தபோது அந்த வேலி பிடிங்கி எறியப்பட்டிருந்தது. அவர்கள் வேலி போட்ட அன்று மாலை 04.00 மணிக்கு ஒரு பெண் எனது மகன் கோவிந்தராஜை ஆஜர் எதிரிகள் அடித்ததாக என்னிடம் தகவல் கூறினார். பின்பு நான் அ.சா.1 ஐ அழைத்துக் கொண்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு 3 நபர்கள் இருந்தார்கள். அந்த சமயம் அவர்கள் என் மகன் கோவிந்தராஜை அடித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அடிக்காதீர்கள் என்று அவர்களிடம் கூறினோம், ஆனால் அவர்கள் எங்களையும் அடித்தார்கள். அ.சா.1 ஐ தாக்கினார்கள். என்னை எதிரிகள் மூவரும் சேர்ந்து கட்டைக் கம்பால் எனது வலது பக்க இடுப்பில் அடித்தார்கள். அடித்தவுடன் நான் மயக்கமடைந்துவிட்டேன் என்றால் சரிதான். அதன் பிறகு அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றபோது வேறு யாரும் இருந்தார்களா? என்பது தெரியாது. நான் மயக்கமடைந்த பின்பு எனது மகன் கோவிந்தராஜும், அ.சா.1ன் மகன் மாயக்கண்ணனும் ஆட்டோவில் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அ.சா.1 ஐ எங்களுடனே ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டோம். நாங்கள் சுமார் 05.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம். பின்பு சுமார் அரைமணி நேரம் கழித்து போலீசார் மருத்துவமனைக்கு வந்தனர். அ.சா.1ன் மகன் மாயக்கண்ணனும், எனது மகன் கோவிந்தராஜும் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தனர். அவர்கள் புகார் கொடுத்தபின்பு போலீசார் வந்து என்னை விசாரித்து, சம்பவத்தை பற்றி கேட்டு எழுதிக்கொண்டு சென்றார்கள். போலீசாரிடம் சம்பவத்தைப் பற்றி நானும், அ.சா.1ம் கூறினோம். அதன்பின்பு இன்றுவரை போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிகள் எங்கள் ஊருக்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் நாங்கள் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு சென்றுவிட்டோம். வேறு எந்த

மருத்துவமனைக்கும் சென்று நாங்கள் மருத்துவம் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எனது மகனுக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. (அ.சா.2 இந்த கேள்விக்கு தனது மார்பில் அடித்துக்கொண்டு நான் சொல்வது அனைத்தும் உண்மைதான் என்று கத்தினார்.) நான் சொன்னவாறு சொன்ன இடத்தில் மேற்படி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண் 2
திருவில்லிப்புத்தூர்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SRIVILLIPUTTUR
(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE )
CC .No.164/2021
16-04-2025
Deposition of Witness for : P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name : | கோவிந்தராஜ் | Religion : | |
| Father's /Husband Name : | மாயா | Taluk : | |
| Village : | ரெங்கநாதபுரம் | Calling : | |
| Caste | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) of the day of 16-04-2025
எதிரிகள் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை -</u>

நான் திருவில்லிபுத்தூரிலுள்ள ரெங்கநாதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது அண்ணன். அ.சா.2 எனது அப்பா. தேதி, வருடம் ஞாபகம் இல்லை. எனது இரண்டாவது அண்ணன் மாயாண்டி தனது சுமார் 1 ஏக்கர் அளவிலுள்ள தனது இடத்தை விற்க வேண்டுமென்று என்னிடம் கூறினார். தன்னிடம் பணம் இல்லை என்றும், நீயும், அ.சா.1ம் ரூ.5,00,000/- கொடுத்துவிட்டு எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறினார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், வெளி ஆட்களிடம் கொடுக்க வேண்டாம் பிரச்சனை வந்து விடும் என்று எனது அண்ணனிடம் கூறினேன்.

அந்த சமயம் எங்கள் காட்டிற்கு பக்கத்து ஒரு நிலத்தை குத்தகைக்கு எடுத்து அரியசாமி விவசாயம் செய்து வந்தார். அதனால் அவர் பழக்கம். நாங்கள் தாய், பிள்ளையாக பழகி வந்தோம். ஒருநாள் அரியசாமி என்னிடம் வந்து விலைக்கு எதாவது காடு வந்தால் தன்னிடம் கூறுமாறு சொன்னார். நான் உடனே எனது அண்ணன் தனது காடை விற்கப் போவதாகவும், நீங்களே வாங்கிக் கொண்டால் எவ்வித பிரச்சனையும் இல்லாமல் சுமூகமாக இருக்கும் என்று கூறினேன். நான் அரியசாமியை எனது அண்ணனிடம் அழைத்து சென்றேன். பின்பு நாங்கள் பேசி ரூ.7,00,000/-த்திற்கு அ.சா.1ன் காட்டை

விற்பதாக முடிவு செய்தோம். மறுநாள் அவர் ரூ.50,000/—த்தை முன் பணமாக கொடுத்தார். எனது நிலத்தில் நான் விவசாயம் செய்து வந்ததில் எனக்கு கடன் ஏற்பட்டு விட்டதால் நான் அதை தரிசாக விட்டுவிட்டேன்.

ஒருநாள் அரியசாமி எனது வீட்டிற்கு வந்து ஏன் உனது காடை தரிசாக விட்டிருக்கிறாய் என்றும், என்னிடம் கொடுத்துவிடு என்றும் கூறினார். நான் அதற்கு இப்பொழுது எனது காட்டை விற்க விருப்பமில்லை என்றும், எனது குழந்தைக் வளர்ந்தபிறகு அதுபற்றி யோசித்துக் கொள்ளலாம் என்றும் கூறிவிட்டேன். உடனே அவர் கிரையம் முடித்து கொடுக்கவில்லை என்றாலும், கட்டுக்குத்தகையாக கொடு நான் வருடத்திற்கு பத்தாயிரம் ரூபாய் தருகிறேன் என்று கூறிவிட்டு சென்றார். பின்பு ஒருவாரம் கழித்து வந்து 3 வருடத்திற்கான கட்டுக்குத்தகை பணம் ரூ.30,000/—த்தை என்னிடம் கொடுத்தார். பின்பு அந்த நிலத்தில் அவர் விவசாயம் செய்து வந்தார். அதனால் நான் அந்தப் பக்கம் செல்வதில்லை. பின்பு சுமார் 2 1/2 வருடம் கழித்து என்னிடம் வந்து உனது காட்டை நீயே வைத்துக்கொள் என்னிடம் ரூ.10,000/—த்தை மட்டும் உனது காட்டில் விவசாயம் செய்ததில் ஏற்பட்ட நட்டத்திற்காக கொடுத்துவிடு என்று கூறினார். அதற்கு நான் ரூ.10,000/— கொடுக்கமுடியாது என்றும், ரூ.5,000/— தான் கொடுக்கமுடியும் என்று கூறி கொடுத்தேன். நான் குத்தகைக்கு ஒத்தி எழுதிக் கொடுத்த அந்த காட்டின் பத்திரத்தை எதிரி அருண்குமார் என்னிடம் கொடுத்துவிட்டார். அதன் பின்பு திருவண்ணாமலைக்காரரர் ஒரு நபர் என்னிடம் வந்து எனது காட்டைக் கேட்டார். அவருக்கு 3 வருடத்திற்கு ஒத்திக்கு ரூ.1,00,000/— பெற்றுக்கொண்டு கொடுத்துவிட்டேன். அவர் எனது காட்டை உழுவதற்காக வண்டியை கொண்டு சென்றபோது அரியசாமி அவரிடம் "என்னிடம் காட்டைக் கொடுக்காமல் உன்னிடம் எப்படிக் கொடுக்கலாம்" என்று கூறி அவரிடம் பிரச்சனை செய்துள்ளார். உடனே அவர் என்னிடம் வந்து உனது காட்டை நீயே வைத்துக்கொள் எனது பணத்தைக் கூட 6 மாதம் கழித்துக் கொடு என்று கூறிவிட்டு சென்றார். நான் அவரது பணத்தை கடன் வாங்கி அடைத்துவிட்டேன். மறுநாளே அரியசாமி அவர் காட்டை தாண்டி எனது

காட்டிற்கு செல்லும் பொதுவரப்பில் வேலி அடைத்துவிட்டார். எனது அண்ணன் அ.சா.1 என்னிடமும், எனது அப்பாவிடமும் அவர் வேலி அடைக்கும் தகவலைக் கூறி எங்களை காட்டிற்கு அழைத்துச் சென்றார். நான் அரியசாமியிடம் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று சமாதானமாக பேசினேன். ஆனால் அவர் வேலி போடக்கூடாது என்றால் எனது காட்டை என்னிடம் கொடுத்துவிடு என்று கேட்டார். உடனே நான் கடனிலிருப்பதாகவும், அதனால் ரூ.7,00,000/- ரூபாய்க்கு எனது காட்டை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன். ஆனால் அவர் ரூ.3,00,000/-ம் தான் தருவேன் என்று கூறினார். அதன் பிறகு நாங்கள் மூவரும் வீட்டிற்கு வந்துவிட்டோம். அதன் பின்பு நான் 12.09.2009 அன்று சுமார் 05.00 மணியளவில் மம்சாபுரம் ரோட்டிலுள்ள கோவிலருகில் நின்று கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு வந்து எனது காட்டை தருமாறு மறுபடியும் கேட்டார்கள். நான் எனது குழந்தைகளை படிக்க வைக்கவேண்டும். ரூ.7,00,000/- வேண்டுமென்றால் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன் (இவ்வாறு கூறிவிட்டு சாட்சி அழுதார்). நாங்கள் அங்கு நின்று பேசிக்கொண்டிருந்தோம், அப்போது எனது அண்ணனும், அப்பாவும் வந்துவிட்டார்கள். அப்போது எதிரி பிரகாஷ் உருட்டுக் கம்பால் எனது அண்ணனை அடித்தார்கள், உடனே எனது அண்ணன் கை ஒடிந்து கீழே அமர்ந்துவிட்டார். பின்பு அரியசாமியும், அருண்குமாரும் சேர்ந்து கம்பை வைத்து எனது அப்பாவின் இடுப்பில் அடித்தனர். உடனே எனது அப்பா கீழே விழுந்துவிட்டார். அருகிலிருந்தவர்கள் என்னை சிறிது தூரம் தள்ளி அழைத்துச் சென்றுவிட்டனர். நான் அப்படியே வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எனது அண்ணனும் காடை நான் கொடுக்காததால்தான் எனது அப்பாவிற்கு இவ்வாறு நடந்தது என்று கூறி என்னிடம் பேசுவதில்லை. சம்பவம் நடந்து ஒருவாரம் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அரியசாமி எனது அண்ணன் காட்டை விலைக்கு வாங்கி சுமார் 6 மாதம் கழித்து எனது காட்டை குத்தகைக்கு கொடுத்தேன். அவர் அந்த காட்டை 2 1/2 ஆண்டு காலம் விவசாயம் செய்து வந்தார். அவரிடமிருந்து ஒத்தி முடிந்து காட்டை வாங்கியதிலிருந்து 20 நாளில் வேறொருவருக்கு ஒத்திக்கு கொடுத்துவிட்டேன். நாள், தேதி, வருடம் எதுவும் எனக்கு தெரியாது. சுமார் 08.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது அ.சா.1 என்னிடம் வந்து வேலி அடைத்தது தொடர்பாக தகவல் கொடுத்தார். நான், அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் தனித்தனி சைக்கிளில் சென்றோம். எனது காட்டிற்கு சைக்கிளில் சென்றால் நான் சுமார் 1/2 மணி நேரத்தில் சென்றுவிடுவேன், எனது அப்பா போன்ற வயதானவர்கள் சென்றால் ஒரு மணி நேரமாகும். நாங்கள் 10.00 மணியளவில் அங்கு சென்றோம். நாங்கள் அங்கு சென்றபோது ஆஜர் எதிரிகள் 3 பேரும் இருந்தார்கள், மேலும் அடையாளம் தெரியாத 2 பேர்கள் இருந்தார்கள். நாங்கள் அங்கு சென்றபோது எதிரிகள் மூவரும் வேலி அமைப்பதற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்கள். நாங்கள் அங்கு சென்று சுமார் 1/2 மணி நேரம் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தோம் ஆனால் அவர்கள் வேலி அமைக்கும் வேலையை செய்து கொண்டேயிருந்தார்கள். அந்த சமயம் வேறு யாரும் அங்கு வரவில்லை. பின்பு அன்று மாலை மம்சாபுரத்திலுள்ள இருளப்பசாமி கோவிலுக்கு அருகில் வடக்கு பார்த்து எனது சைக்கிளில் அமர்ந்திருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் தனித்தனி இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அவர்களுடன் அந்த இடத்திலேயே ரோட்டில் வைத்து எனது இடம் தொடர்பாக பேசிக்கொண்டிருந்தேன். எங்களுக்குள் வேறு எந்த பிரச்சனையும் கிடையாது. வேறு எந்த சண்டை சத்தமும் கிடையாது. சுமார் 05.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் அங்கு வந்தார்கள். அவர்களுடன் சுமார் 1/2 மணி நேரம் பேசிக்கொண்டிருந்தேன். அந்த சமயம் அ.சா.1ம், அ.சா.2ம் அங்கு வந்தார்கள். அவர்களுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. திரும்பவும் அவர்கள் எனது காட்டை கேட்டார்கள். அப்போது அ.சா.1ம், அ.சா.2ம் ஊர் பெரியவர்களை வைத்து பேசிக்கொள்ளலாம் என்று சொல்லிக்

கொண்டிருந்தபோதே இருதரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட்டதும் என்னை சந்தனம் மற்றும் செல்வம் என்ற இருநபர்கள் என்னை அழைத்துச் சென்றனர். அவர்கள் என்னை அழைத்துச் செல்லும்போது எதிரிகள் எனது அண்ணன் கையை உடைப்பதை நான் தூரத்திலிருந்து பார்த்தேன். எனது அ.சா.2 ஐ இடது பக்க இடுப்பில் அடித்ததையும் பார்த்தேன். உடனே அவர் கீழே விழுந்துவிட்டார். என்னை அழைத்துச் சென்றுவிட்டனர். அதன்பிறகு அங்கு என்ன நடந்தது என்று எதுவும் எனக்கு தெரியாது. நான் அ.சா.1 ஐயும், அ.சா.2 ஐயும் மருத்துவமனைக்கோ, வேறு எங்கோ நான் அழைத்துச் செல்லவில்லை. நான் சம்பவம் நடந்த அன்று அவர்களை மருத்துவமனைக்குச் சென்று பார்க்கவில்லை. மறுநாள் அ.சா.1ன் மகன் என்னிடம் வந்து ஏட்டையா வந்து அ.சா.1 மற்றும் அ.சா.2 டிடம் எழுதி வாங்கிச் சென்றதாக கூறினார். 2, 3 நாட்கள் கழித்து என்னை போலீசார் தொலைபேசி மூலம் அழைத்தார்கள். நான் காவல் நிலையம் செல்லவில்லை. 5 நாட்கள் கழித்து நான் காவல் நிலையம் சென்றேன் என்னை போலீசார் விசாரணை செய்தார்கள். அப்போது நான் சம்பவத்தன்று நான் கோவிலருகில் நின்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் என்னிடம் வந்து நிலத்தை பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள் என்று போலீசாரிடம் கூறினேனா? என்றால், அதை மட்டும்தான் கூறினேன், அதை தவிர்த்து வேறு எதையும் கூறவில்லை. நான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிலம் வாங்குவது, விற்பது தொடர்பாக எங்களுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் போட்டி இருப்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக அ.சா.1 ஐயும், அ.சா.2 ஐயும் ஆஜர் எதிரிக் அடித்தார்கள் என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண் 2
திருவில்லிப்புத்தூர்.